<u>**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**</u>

**O.S. No.212/2015**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 10.03.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : குஞ்சம்மாள் Father Name : ஆறுமுக படையாட்சி

துவக்க நேரம்:12.52P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. எனக்கு மூன்று பெண் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து வாரிசு அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோரி இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். எனது பெண் பிள்ளைகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காததால் இவ்வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட உயில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் பதிவு செய்யப்பட்டதாகத்தான் என் கணவர் என்னிடம் கூறினார். நான் சொல்வது தவறு என்றாலும், மேற்படி ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும் சரியல்ல.

2. எனது கணவருக்கு மருத கவுண்டர் மகன் சிக்காக்கவுண்டர் என்பவர்தான் உயில் எழுதி வைத்தார் என்றால் சரிதான். மேற்படி உயிலில் சிக்காகவுண்டருக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்றாலும், அதனால் என் கணவருக்கு எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளது என்றாலும்

சரிதான். கடந்த 07.02.1988-ல் சிக்காகவுண்டர் இறந்தார் என்றால் கடந்த 39 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். சிக்காகவுண்டரின் மனைவி பெயர் பாப்பாத்தி என்றால் சரிதான். மேற்படி சிக்காகவுண்டருக்கு ராமாயி என்ற மகளும், மூக்கன் என்ற மகனும் உள்ளனர் என்றால் சரியல்ல, அவர்களுக்கு வாரிசுகள் இல்லை.

3. மேற்படி உயில் ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு சரியான நான்கெல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.1 ஆன உயில் சாசனத்தில் ச.எண்.359/4 பட்டா எண். 1745-ல் கண்ட சொத்தைதான் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் பத்திரம் வாங்குபவரின் பெயர் உள்ள இடத்தில் எழுதப்பட்டிருந்த பெயர் அழிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணத்தில் உள்ள சொத்திற்கும், தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், மேற்படி ஆவணத்தை எனது கணவர் பொய்யாக தயாரித்துள்ளார் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.
முடிவு நேரம்:01.04 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

Sd/-D.JansiRani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.212/2015, Dt.10.03.2026.